திரு. பெ. மலேச்சாமி: தலைவரவர்களே, வேறு தென் மாவட்டங் களில் உள்ள மலைத் தொடர்களில் தங்கம் கிடைக்கிறதா என்பது பற்றி ஆய்வு செய்ய இந்தக் குழு விரும்புகிறதா? அதுபற்றி நமது அரசு மேலும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றிக் குறிப்பு இல்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, இந்தத் தங்கத்தை எடுப்பதற்கு இவ்வளவு செலவு ஏற்படுகின்ற காலத்திலே, நம்மு டைய தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் சித்தர்கள் செம்பைத் தங்கமாக மாற்றியதாக, ஏட்டிலே இருப்பதாக, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து, இருக்கும் செம்பைத் தங்கமாக மாற்றி இந்த நாட்டை வளப்படுத்த செயல்திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சித்தர்கள் பின்பற்றிய முறையைப்பற்றி இலக்கியங்களில் ஆராய்ச்சி செய்தார்கள், நிபுணர்களும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து வருகிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தங்கம் மட்டுமல்லாமல், பிற கனிவளங்களும் கிடைப்பதாகச் சொல்லப்படு கிறதே, வேறு என்னென்ன பொருள்கள், எங்கெங்கு இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க தமிழக அரசு தனி ஆய்வுக்குழுவை ஏற்படுத்திப் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே நம்முடைய தொழில்துறையில் ஒரு பகுதியில் ஆய்வு செய்யும் குழு வேலை செய்து வருகிறது. நாடு முழுவதும் எங்கெங்கு இப்படிப்பட்ட வாய்ப்புக்கூறுகள் தென்படுகின்றனவோ அங்கெல்லாம் சென்று ஆராய்ந்து வருகிறார்கள்.

அவினாசி பாசனத்திட்டம்

*164 வின.—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி பாசனத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது எடுத்துக் கொள் ளப்படும்?

(உ) அத்திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கர் பாசனவசதி பெறும்?

1970 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (ஆ) & (உ) அவிஞசி பாசனத்திட்டம் தற்போதைக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அவிஞசி பாசனத்திட்டம் தற்போதைக்குத் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இந்த அவிஞசித் திட்டத்தோடு, பாண்டியார்-புன்னம்புழா என்ற இரண்டு ஆறுகளையும் சேர்த்து பெரிய அணை கட்டினல் கோவை தாலுக்கா, அவிஞசி, பல்லடம் வட்டங்களில் உள்ள செட்டிபாளையம் போன்ற ஊர்கள் பயனடையும். அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாண்டியார்-புன்னம்புழா திட்டம் மின்சாரத்திற்காக ஏற்பட்ட திட்டமாகும். அதுபற்றி மின்சாரத்துறை அமைச்சர்களிடத்தில் கேட்டால் விளக்கமாகப் பதில் சொல்வார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தற்காலிகமாக அவிஞசி திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்திஞல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது? அவிஞசித் திட்டத்தை விரிவுபடுத்திஞல் 3 தாலுக்காக்களுக்கு, கோவை, பல்லடம், அவிஞசி தாலுக்காக்களிலுள்ள குட்டை குளங்கள் மூலம் தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயிகள் பலனடையச் செய்யமுடியும் என்று அமைச்சரவர்கள் கூறிஞர்கள். அந்த ஆலோசனை எந்த மட்டத்தில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கீழ்க்கண்ட காரணங்களுக்காக அவிஞசித் திட்டத்தைத் தற்போதைக்கு தள்ளிப் போடவேண்டியிருக்கிறது.

கீழ்ப்பவானி ஆயக்கட்டில் ஆண்டுக்காண்டு நீர்ப்பற்ருக்குறை—தற்போது கூட இருந்து வருகிறது.

இரண்டாவதாக, கேரளத்தோடும், மைசூர் மாநிலத்தோடும், உள்ள நல்லெண்ணப் பிரச்னை காரணமாகவும் இப்பொழுது முடிவு எடுக்க முடியவில்லை.

அடுத்தபடியாக, குந்தா நீர் மின்சக்தி நீர்த்தேக்கங்கள் செயல்படுவது கீழ்பவானித் திட்டம் செயல்படுமுறையில் கணிசமான அளவுக்குத் தடை விளைவிக்கிறது. இதுபற்றி மின்சார வாரியத்திற்கும், தலைமைப் பொறியாளருக்குமிடையே (பாசனம்) மன நிறைவு தரும் வகையில் தீர்வு காணப்பட்டாலன்றி தற்போதுள்ள பாசன வசதிகூட உறுதியாக இருக்காது என்பதாலும் தள்ளிப் போடவேண்டியுள்ளது.

மேலும் பொதுப் பணித்துறைச் செயலாளரும் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார் :—

"பில்லூர் அணைக்கட்டுக்குக் கீழே உள்ள நெல்லித்துறை நீர் மின்சாரத் திட்டத்திற்குத் தனியே ஒப்பளிப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர் கிடைக்கும்பொழுது, இந்த நீர்த் தேக்கத்திற்குமேல் வரையறுத்த அவினுசித் திட்டக் கால்வாயை அமைப்பது குறித்து பிறிதோர் தேதியில் கருதிப் பார்க்கலாம். தற்போது கிடைக்கும் நீர் அளவைப்பற்றி அறிந்து கொள்ளாமல் பணத்தை முதலீடு செய்வது உகந்ததல்ல".

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, இந்த அவினுசித் திட்டம் 10, 15 ஆண்டுகளாகவே சொல்லப்பட்டு வருகிறது, ஓட்டு வாங்க உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்பொழுது தண்ணீர் இல்லை. இப்பொழுது மாத்திரம் அல்ல, முன்னேயும் முதலமைச்சரவர்கள் சொன்னுர்கள். பாண்டியார், புன்னப்புழாவையும் சேர்த்தால் பயன் கிடைக்குமென்று சொன்னுர்கள். நெடு நாட்களாக அங்கத்தினர்களும், விவசாயச் சங்கங்களும் கேட்டு வருகின்றன. அதனுல் அவ்வாறு செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்கான பதிலை நான் ஏற்கெனவே அளித்தேன். பாண்டியார், புன்னம்புழாத் திட்டம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம். அதுபற்றிய கேள்வியை மின்சாரத்துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்க வேண்டும்.

குடிநீர் வழங்கு வாரியம்

***165 வினு—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் வாரியம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) தமிழ்நாடு நீர் வழங்கு கழிவு நீர், வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பொதுப்பணித் துறை என்று, பப்ளிக் ஹெல்த் என்ஜினியரிங் என்று இருக்கும்பொழுது இந்தக் குடிநீருக்காக ஒரு வாரியம் அவசியமா? அவ்வாறு ஏற்படுத்துவதனுல் ஆண்டு ஒன்றுக்கு என்ன செலவு ஏற்படப் போகிறது என்று அறிவிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, குடிநீர் வழங்கல் திட்டங்கள் தற்போது பல்வேறு துறைகளால் கவனிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களுக்கு நீர் வழங்கும்

TRUTH ALONE TRIUMPHS